**ஜூலை – 07**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதல் வாடகை ஆம்புலன்ஸ் சேவையானது மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியால் புதுதில்லியில் கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது. வேகன் கேப் என்று பெயரிடப்பட்ட தொடக்க நிறுவனம் இச்சேவையைத் தொடங்கியுள்ளது. இச்சேவையில் அதிகரிக்கும் விபத்துகளின் எண்ணிக்கையை நினைவில் கொண்டு மருத்துவரீதியில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களை இந்நிறுவனம் நியமித்திருக்கிறது.
- தொடங்கப்பட்ட 34 வருடத்திற்குப் பிறகு இந்திய விளையாட்டு ஆணையம் (Sports Authority of India) (Sport India) இந்திய விளையாட்டு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆணையம் (Authority) என்ற வார்த்தை நீக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## துணைநிலை ஆளுநருக்கு தன்னிச்சையான அதிகாரங்கள் இல்லை - SC

- துணைநிலை ஆளுநர் அனில் பய்ஜாலுக்குத் தன்னிச்சையாக முடிவு எடுக்கும் அதிகாரம் இல்லை என்று உச்சநீதி மன்றம் கூறியுள்ளது.
- துணைநிலை ஆளுநர் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைப்படி முடிவெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளது. துணைநிலை ஆளுநர் 'தடுப்பாளராக' செயல்படக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- டெல்லியின் துணைநிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சருக்கிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் காரணமாக வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.
- நிலம், பொது அமைதி மற்றும் காவல்துறை ஆகிய மூன்று துறைகள் தவிர, மற்ற அனைத்து துறைகளின் மீதும் சட்டம் இயற்ற மற்றும் நிர்வாகம் நடத்த டெல்லி அரசுக்கு அதிகாரம் உள்ளது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

## அமைச்சரவை ஒப்புதல்கள்

### *அகர்தலா விமானநிலையத்தின் பெயர் மாற்றம்*

- திரிபுராவில் உள்ள அகர்தலா விமான நிலையத்தை மகாராஜா பிர் பிக்ரம் மனிக்யா கிஷோர் விமான நிலையம், அகர்தலா என்று பெயர் மாற்றம் செய்வதற்கான முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இவர் திரிபுராவின் இந்தியாவுடனான இணைப்பிற்கு முன்பு 1923-1947 காலகட்டத்தில் திரிபுராவின் அரசராக இருந்தவராவார்.
- இவர் திரிபுராவின் நவீனக் கட்டிடக்கலையின் தந்தை என்று கருதப்படுகிறார். இன்றைய திரிபுராவின் முழு திட்டமிடுதலும் இவரது ஆட்சிக் காலத்தின் போது தொடங்கப்பட்டது.

### *அரசுக் கிராமப்புற வங்கிகளின் மறுமூலதனம்*

- அரசுக் கிராமப்புற வங்கிகளின் மறுமூலதனத்திற்கான திட்டத்தினை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு (2019-20 வரை) விரிவுபடுத்துவதற்கு மத்திய அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திட்டம், மூலதனத்திற்கும் இடர்வாய்ப்பு மதிப்பேற்றப்பட்ட சொத்துகளுக்கும் (CRAR - Capital Risk Weighted Asset Ratio) இடையே உள்ள விகிதம் 9% என்ற பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச விகிதத்தினை தொடர்ந்து கடைபிடிக்க RRB-க்கு (Regional Rural Banks) உதவும்.
- இது வலிமையான மூலதன அமைப்பு மற்றும் குறைந்தபட்ச CRAR-ன் தேவையான அளவு ஆகியவற்றை உறுதிபடுத்துகிறது.
- இத்திட்டம் RRB-ன் நிதிநிலைத் தன்மையை எளிதாக்குவதற்கும் நிதிநிலையை உள்ளடக்குதலில் RRB-ன் முக்கியப் பங்கு மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள கடன் தேவையை எதிர்கொள்வதற்கும் உதவும்.
- அரசுக் கிராமப்புற வங்கிகளின் மறுமூலதனத் திட்டம் 2010-11ல் தொடங்கப்பட்டது மற்றும் 2012-13 & 2015-16 ஆகிய வருடங்களில் இரண்டு முறை விரிவாக்கப்பட்டது.

### *உலக அறிவுசார் சொத்துக்களுக்கான அமைப்பின் (WIPO - World Intellectual Property Organisation) பதிப்புரிமை ஒப்பந்தந்திற்கான உரிமை பெறுதல் மற்றும் WIPO-ன் செயல்திறன் மற்றும் ஒலியமை வடிவத்திற்கான ஒப்பந்தத்திற்கான உரிமை பெறுதல்*

- WIPO-ன் பதிப்புரிமை ஒப்பந்தம், 1996 மற்றும் WIPO-ன் செயல்திறன் மற்றும் ஒலியமை வடிவத்திற்கான ஒப்பந்தம் 1996 ஆகியவற்றுக்கான இந்தியாவின் உரிமை பெறுதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தங்கள், இணையதள மற்றும் இலக்கமுறை பதிப்புரிமைக்கான பாதுகாப்பிற்காகவும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்கான முன்மொழிதல் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையினால் சமர்ப்பிக்கப்பட்டது.
- இந்த இரண்டு ஒப்பந்தங்களும் படைப்பாளிகள் மற்றும் உரிமையாளர்களை அவர்களின் வேலைப்பாடுகளைப் பாதுகாக்கவும் அவற்றின் உபயோகத்தைப் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கவும் ,
    - உரிமையாளர்கள் மேம்பாட்டு தகவல்கள் மற்றும்
    - தொழில்நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகளின் பாதுகாப்பு

  ஆகியவற்றை கொண்ட ஒரு கட்டமைப்பை வழங்குகிறது.

### *NCSK-கான துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை உருவாக்குதல் (NCSK - National Commission for Safai Karmacharis)*

- சஃபாய் கர்மசாரிக்களுக்கான தேசிய குழுவிற்கான துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை உருவாக்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இலக்குக் குழுக்களின் விருப்ப நோக்கங்களான நலம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றைப் பூர்த்தி செய்தல் மற்றும் NCSK-ன் செயல்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதே இந்த முடிவின் குறிக்கோள் ஆகும்.

- தற்பொழுது இக்குழு 4 உறுப்பினர்கள் மற்றும் ஒரு தலைவரைக் கொண்ட குழு ஆகும்.
- இந்த பதவிகளின் உருவாக்கத்துடன், NCSK தற்பொழுது ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

## பெரும் எண்ணிக்கையிலான காவல்துறைக்கான சீர்திருத்தங்களை உபயோகிக்கும் முறை - உச்சநீதிமன்றம்

- பெரும் எண்ணிக்கையிலான நாட்டில் காவல்துறைக்கான சீர்திருத்தங்களை உபயோகிக்கும் முறைகளுக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவின் தலைமையிலான அமர்வு அனுமதி அளித்துள்ளது.
- இது எல்லா மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் ஏதேனும் ஒரு காவல்துறை அலுவலரை தற்காலிக காவல்துறை பொது இயக்குநராக நியமிக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.
- இந்த உத்தரவில் சாத்தியமான நபர்களை காவல்துறை பொது இயக்குநர் (அ) காவல்துறை ஆணையராக நியமிக்க எல்லா மாநிலங்களையும் மூத்த காவல்துறை அலுவலரின் பெயர்களை UPSC-க்கு (Union Public Service Commission) அனுப்ப கூறியுள்ளது.
- இதையொட்டி UPSC மிகவும் பொருத்தமான மூன்று அலுவலர்களைக் கொண்ட பட்டியலை தயாரிக்கும். இதனால் மாநிலங்கள் இயல்பாக அதிலிருந்து ஒருவரை காவல்துறை தலைவராக நியமிக்க இயலும்.
- காவல்துறை சீர்திருத்தங்களுக்கான வரலாற்று சிறப்புமிக்க 2006 தீர்ப்பில் ஒரு பகுதியின் திருத்தத்தினை நாடும் மத்திய அரசின் மனுவினை நீதிமன்றம் விசாரித்தது.
- செப்டம்பர் 22, 2006 அன்று மத்திய அரசிற்கும் பிரகாஷ் சிங்கிற்கும் இடையேயான வழக்கில் உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்ப்பினை வழங்கியது.
    - மாநில அளவில் மாநில பாதுகாப்பு குழுவை அமைத்தல்.
    - குறைந்தபட்ச 2 வருட பதவிகாலம் வகிக்கும் காவல்துறை பொது இயக்குநரின் நியமனத்தின் வெளிப்படையான செயல்முறைகள்.
    - செயல்பாட்டு கடமைகள் கொண்ட மற்ற காவல்துறை அலுவலர்களான காவல்துறை கண்காணிப்பாளர்களும் குறைந்தபட்சம் 2 வருட பதவிகாலத்தில் இருக்கலாம்.
    - காவல்துறை கழக ஸ்தாபனத்தினை நிறுவுதல், இந்த ஸ்தாபனம் காவல்துறை அலுவலர்கள் சம்பந்தமான இடமாற்றம், நியமித்தல், பதவி உயர்வு மற்றும் இதர சேவைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கும்.
    - மத்திய காவல்துறை அமைப்பின் (CPO - Central Police Organisations) தலைவரைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் வேலைவாய்ப்பிற்கான குழுவினை மத்திய அளவில் தயார் செய்வதற்கு தேசிய பாதுகாப்பு குழுவினை நிறுவுதல்.
    - புலனாய்வினைப் பிரித்தல், காவல்துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் செயல்பாடுகள்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## கோலா கரடியின் மரபணுத் தொகுதி வரைபடம் கண்டுபிடிப்பு

- 54 ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட சர்வதேசக் குழு வயிற்றுப் பகுதியில் குட்டியைக் காக்கும் கோலா கரடியின் முழு மரபணுத் தொகுதி வரைபடத்தை கண்டுபிடித்துள்ளது. இந்த முழு மரபணுத் தொகுதியானது 26,000 மரபணுக்களைக் கொண்டுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்ட மரபணு குடும்பத்திற்குள்ளேயே (P450 மரபணு) பெருக்கமடைவதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மரபணுக்கள் யூக்கலிப்டஸ் தழைகளில் உள்ள நச்சுப் பண்பை கோலா கரடி மூலம் நீக்குவதற்கு உதவுகிறது.
- கோலா கரடி வயிற்றுப் பகுதியில் உள்ள இளம் குட்டியைக் காக்க பாலூட்டும் புரதங்கள் பயன்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேலும் இந்த புரதங்கள் மூலம் வலுவான எதிர்ப்பு சக்தியை இந்த இளம் குட்டிகள் பெறும்.
- கோலா பாஸ்கோலாக்டோஸ் சினரிஸ் அல்லது பொதுவாக, கோலா கரடியானது ஆஸ்திரேலியாவை பிறப்பிடமாகக் கொண்ட, வயிற்றுப் பகுதியில் குட்டியைக் காக்கும் குணமுடைய மரங்களில் வாழும் தாவர உண்ணியாகும்.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கமானது (IUCN - International Union for Conservation of Nature) வாழ்விட இழப்பு மற்றும் பரவலான நோய்களின் காரணமாக கோலா கரடியை 'மறையத்தகு உயிரினங்கள்' பட்டியலில் வகைப்படுத்தியுள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## உயர் அச்சுறுத்தல் இனங்களுக்கான மீட்புத் திட்டம்

- தேசிய வன உயிர்களுக்கான மன்றம் சமீபத்தில் 4 இனங்களை சேர்த்துள்ளது.
    1. வடக்கு நதி டெராபின் ஆமைகள் (Northern River Terrapin) - ஆற்று நீரில் வாழும் இந்த ஆமை இனங்கள் கிழக்கு இந்தியாவில் பாயும் ஆறுகளில்

காணப்படுகிறது.

2. படைச் சிறுத்தை (Clouded leapord) - இமயமலையின் அடிவாரத்தில் காணப்படுகிறது. 2016ஆம் ஆண்டு பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN) மதிப்பீட்டின் படி படைச் சிறுத்தையானது 'மறையத்தகு உயிரினங்கள்' எனும் சிவப்புப் பட்டியலில் வகைபடுத்தப்பட்டுள்ளது.
3. அரேபிய கடலின் ஹம்பேக் திமிங்கலம் (Arbian Sea Humpback Whale) - ஓமன் கடற்கரையிலிருந்து அரேபியக் கடலின் வழியாக இந்தியக் கடலோரமாக பயணித்து, இலங்கை வரை இடம்பெயரும்.
4. சிவப்புப் பனிக்கரடி - சிக்கிம், மேற்கு வங்காளம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் காணப்படும். IUCN ஆனது இந்த பனிக்கரடியை 'அருகிவரும் உயிரினங்கள்' பட்டியலில் வகைப்படுத்தியுள்ளது.

உயர் அச்சுறுத்தல் இனங்களுக்காக மத்திய அரசின் மீட்புத் திட்டத்தில் இந்த 4 இனங்களும் அடங்கும்.

- மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவ மாற்ற அமைச்சகத்தின் வனவிலங்குப் பிரிவின் பரிந்துரையின் படி இவை சேர்க்கப்பட்டுள்ளன.
- மத்திய அரசின் நிதி உதவி பெறும் ஒருங்கிணைந்த வனவிலங்கு வசிப்பிடத்தின் வளர்ச்சித் (IDWH - Integrated Development of Wildlife habitation) திட்டத்தின் மூன்று பகுதிகளுள் இதுவும் ஒன்றாகும். இது 2008-09 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.



- - - - - - - - - - - - - - -